
Kavignan

# கவிஞன்

முற்றுமுழுதான மாதாந்தக் கவிதைச் சஞ்சிகை

இனி நீங்களும் விளையாடலாம் மொழியோடு



இதழ்-002 * சித்திரைத் திங்கள் 2010

# Kavignan
# கவி ஞன்

வணக்கம்,

முதலாவது சஞ்சிகைக்கு நீங்கள் அளித்த ஆதரவிற்கு எனது நன்றிகள்.

தமிழ் இலக்கியத்தின் அடிப்படை வடிவம் கவிதையாகும். இது காலத்திற்குக் காலம் அரசியல், கலாசாரம், அறிவியல் என்பனவற்றின் தாக்கத்தால் மாற்றமுற்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது இன்னும் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

தமிழ் இலக்கியத்தின் ஆரம்பமாகக் கொள்ளப்படுகின்ற சங்க காலம், சங்கமருவிய காலத்தை எடுத்துக்கொண்டால், அங்கே அகவல்,வஞ்சி, பரிபாடல் கலிப்பா என்றும், பல்லவர் காலம், சோளர் காலத்தை எடுத்துக் கொண்டால், அங்கே சிறிது மாற்றமுற்று குறட்பா, வெண்பா, விருத்தப்பா என்றும், இதனைத் தொடர்ந்து வந்த நாயக்கர் காலத்தில் பிறமொழிச் செல்வாக்கால் அரிதில் பொருளுணரக் கூடிய யமகம், திரிபு, மடக்கு என்றும் கவிதைகள் புனையப்பட்டன. இவை யாவும் இன்னபொருளை இப்படித்தான் பாடவேண்டும் என்ற யாப்பிலக்கண வரையறைக்குள் நின்று பாடப்பட்டன.

இதன் பின் ஐரோப்பியர் வருகையின் விளைவாக கவிதை வடிவமும் பொருளும் புதிய போக்கில் பரிணமித்தது. இந்த வகையில் ஓசை நயம்மிக்க கண்ணி, வண்ணம், சிந்து முதலான கவிதை வடிவங்கள் தோற்றம் பெற்றன. இதன் மூல கர்த்தாவாக விளங்கியவர் மகாகவி பாரதியார் ஆவார்.

தற்காலத்தில் இன்னும் மேலைத்தேய செல்வாக்கால் இலக்கண வரம்புகளை உடைத்தெறிந்து தேவையற்ற சொற்களைக் குறைத்து, கலையம்சமுடன் புதுக்கவிதை, நவீன கவிதை, வசனக் கவிதை குறியீட்டுக் கவிதை, ஹைக்கூ என்று பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கிறது கவிதை இலக்கிம்.

இக்கவிதை உலகம் இனி என்ன நிலையை அடையும், வசனத்திற்கும் மேலான வண்மை என்ன? வாருங்கள், வரையுங்கள், தீட்டுங்கள் உங்கள் சிந்தனைத் திறத்தை.

உங்கள் எண்ணங்களை எழுத்துக்களாக்கி அனுப்பவேண்டிய முகவரி:

"கவிஞன்"
கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு-5(E.P),
மட்டக்களப்பு,
இலங்கை.

*"KAVIGNAN"*
*Co-op Road,*
*Puthukkudiyiruppu - 5 (E.P),*
*Batticaloa,*
*Sri Lanka.*

**மின்னஞ்சல்:** kavignan@live.com

அன்புடன்
ஆசிரியர்

25.04.2010

# உள்ளே....

☞ அறிமுகப் புதுமுகம்........................................ 04
☞ இம்மாதப் பிரபலம்........................................ 05
☞ பாவியடா நான்........................................ 06
☞ இலக்கனக் கவிஞன் ........................................ 07
☞ கவிதைத்துளிகள்........................................ 08
☞ நீயும் நானும்........................................ 09
☞ கிராமியக் கவிஞன்........................................ 10
☞ அட்டைப்படக் கவிதை........................................ 11
☞ அந்திச் சபதங்கள் ........................................ 12
☞ தோழியாய் மட்டும்........................................ 12
☞ மேசைக் கிறுக்கல்........................................ 13
☞ நிறைமகள்........................................ 14
☞ கவிஞனுக்கு வாசகனிடமிருந்து........................................ 15

## சிந்தனைக்கு...

*உன் முகத்திற்கு ஆயிரம் அலங்கரிப்பை விட சிறு புன்னகையே சிறந்தது. என்னதான் வண்ண வண்ணப் பூச்சுக்களால் உன்னை அழகுபடுத்தினாலும் புன்னகை இல்லாத உன் முகம் வாடிய பூவிற்குச் சமம்.*

*" புன்னகையானது செலவில்லாமல் அணிந்துகொள்ளும் வலிமை வாய்ந்த அணிகலனாகும் "*

- ஜெயராமநாதன் லெதீஸ்ரூபன் -

# அறிமுகப் புதுமுகம்



முழுப்பெயர்: தங்கராசா இன்பராசா

முகவரி: புளியடி வீதி,
புதுக்குடியிருப்பு-4 (E.P),
மட்டக்களப்பு.

பிறந்த திகதி: 1985.07.13

கல்வி கற்ற பாடசாலை:
மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம்

திறமைகள்:
பாடசாலைக் காலத்தில் விவாதம், பேச்சு, கவிதை, குறுநாடக ஆக்கம், தமிழறிவுப் போட்டி போன்றவற்றில் பங்குபற்றி பிரதேச, மாவட்ட, மாகாண மட்டங்களில் வெற்றியீட்டியமை

கவிதை அனுபவம்:
உயர்தர செயற்றிட்டமாக 2002 ல் 'விடியலை நோக்கி' எனும் கவிதை நூல், தாழையூர் முத்துமாரியம்மன் காவடி,கும்மிப் பாடல்கள்.

ஏனையவை:
கதிரவன் கலைக்கழக தலைவர்
கதிரவன் சஞ்சிகை பிரதம ஆசிரியர்

## திருக்குறள்

மறுமை இம்மை மலர்வாக சங்கம்
மருவியதோர் காலத்தின் மாணிக்கமே!
திருமறையாய் பொதுமறையாய்-பேதமின்றி
திருவள்ளுவரின் தீந்தமிழே திருக்குறளே!

திருவருளின் ஒளி விளக்கே! அரும்பொருளே-எங்கள்
இருளகற்றும் இன்தமிழே திருக்குறளே!-பெருமையுடன்
பிறந்திட்ட பெரும் பொருளே!-வள்ளுவர்
கருவுதித்த செந்தமிழே திருக்குறளே!

இருவரியால் பெருமையுறும் திருக்குறளே!-என்றும்
இளைத்திடா துலகாளும் இன்பத்தமிழே!
மருவிடுவோம் அதனடியை மாண்புறவே - நித்தம்
மாட்சிமையே உண்டாகும் மறுப்பே இல்லை.

அருள் மொழியாம் திருக்குறளே! அகத்தின் வாழ்வே!
அழியாது ஒழியாது நிந்தன் புகழே
பெருகிடுமே பாரினிலே மாண்புதானும் -குறள்
பேறிவை எந்நாளும் மனத்தே கொண்டால்.

அருமை புகழ் திருக்குறளை-அகத்தில் கொண்டால்
அமரத்துவம் அடைந்திடவும் அடியே கோலும்
சிறுமை மனம் சிதைந்திடுமே - மண்ணின் மீது
சிறப்பான வாழ்வு நிதம் பெருகிடுமே!

-த.இன்பராசா-

(சாகித்திய விழா-2006 ஐ முன்னிட்டு பிரதேச கலாசார பேரவை நடாத்திய கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றகவிதை )

# இம்மாத பிரபலம்

## மார்கரெட் செல்லத்துரை



வாசிக்கும் ஆர்வமே தன்னை எழுதத் தூண்டியதாக கூறும் மலேசிய பெண் எழுத்தாளரான இவர் சகலதுறைகளிலும் தனது இலக்கியச் சிறகை விரித்துப் பறந்துகொண்டிருப்பவர் என்றால் மிகையாகாது. தமிழுணர்வில் விஞ்சி நிற்கும் இவர், நாடகம், சிறுகதை, கவிதை, கட்டுரை, நகைச்சுவை, போன்ற துறைகள் மட்டுமல்லாது பிரதானமாக கேலிச்சித்திரம் வரைவதில் வல்லவராகவும் திகழ்கிறார்.

இதுவரை 'சில்லென்று பூத்த சிறுநெருஞ்சிக் காட்டினிலே', 'போதும் உங்கள் ஜாலமே' எனும் பல்சுவைக் கதம்ப நூல்களை எழுதி வெளியிட்டுள்ள இவர், பெரும்பாலான சஞ்சிகைகளில் தனது ஆக்கங்களின் மூலம் வாசகர் நெஞ்சங்களில் நீங்காத இடம் பிடித்துள்ளார். சமுதாய சேவைக்கு மலேசிய அரசாங்க அங்கிகாரமாய் 2007.07.19 அன்று பி.எம்.சி விருதின் கௌரவத்திற்குரியவரான இவருக்கு தான் எழுதிய கவிதை களில் தனக்குப் பிடித்த கவிதையாக இதைத் தருகிறார் கவிஞனுக்கு...

## போதும் உங்கள் ஜாலமே

(ஓவியம்: மார்கரெட் செல்லத்துரை)

புரட்சி புதுமை என அலையும்
பொண்ணுங்களே நில்லுங்க
வறட்சி நோக்கி நம்பண்பு
வாடிவதங்கிப் போகுதுங்க

ஆம்பளையைக் கண்டுப்புட்டா
ஆங்கிலமும் எதுக்குங்க?
தாங்கலையே உங்க லொள்ளு
தமிழை ஏங்க மறந்தீங்க!

கண்பேசி இதயம் நுழையும்
காதல் ரொம்பப் புனிதம் ங்க
கைப்பேசி குறுஞ்செய்தி
காதல் ஆயுள் கம்மிங்க



சிலசிலுன்னு காற்றடிக்க
சின்ன ஜாக்கெட் எதுக்குங்க
குறுகுறுன்னு பையன் பார்த்தா
குற்றமுன்னு குதிப்பீங்க

படிச்ச பொண்ணு உங்களுக்கு
பாவம் சட்டையெல்லாம்! கயிறுங்க
முடிச்சவிக்கிங்க ஜாஸ்த்திங்க
முதலில் அதை உணருங்க

தொப்புளிலே தோடுபோட்டு
திறந்து காட்டுவ தேனுங்க
கப்பலிலே மானம் போகுது
கவலையாக இருக்குங்க!

இடுப்பைக் காட்ட நீங்களே
இறுக்கிக் கட்டுவ தேனுங்க
அடுப்பை மூட்டி ஆணுக்குள்
ஆசைத்தீ வைப்பதும பாவங்க!

குட்டைப் பாவாடை கட்டி நீங்க
குதித்து நடப்ப தேனுங்க
நட்டுந் நடுமாறி விழுந்தா
தர்ம சங்கடந் தானேங்க!

இறுக்கிப் பிடிக்கும் ஆடைகண்டு
இளைஞன் சறுக்கி விழுறானுங்க
சிறுக்கி பண்ணும் ஜாலந்தாலே
கிறுக்கனாகிப் போறாங்க!

உலக்கை பிடித்த பாட்டியும்
இரவிக்கை ஒன்னும் போடலே–அவ
களி கிண்டிய போது கூட
துளி உடம்பைக் காட்டலே!

இழுத்துப் போர்த்த சொல்லல
இருப்பைக் காட்டுவதும் சரியல்ல!
சிலுத்து சினம் கொள்ளாதீங்க
சிந்தித்துக் கொஞ்சம் பாருங்க!

பொண்ணுன்னா பூவுன்னு
பெரியவங்க சொல்வாங்க!
மண்ணிலே அவ பொறந்தது
மா தவமுன்னு சொன்னாங்க!

கரைகடந்தா ஆறதுவும்
காணாமலே போகுங்க!
வரையறை மீறும் பெண்மையும்
வாசமிழந்து வாடுங்க!

எனவே,
பள்ளம் மேடு மறைத்து நீங்க
பண்பைக் காக்க வேணுங்க
உள்ளதெல்லாம் காட்டிபுட்டா
உடையவனுக் கேது மிச்சங்க!

MAGARET SELLADURAI
No:40,Jalan 3A
Taman Hiew Piaw
43500 Semenyih
Selengor Darul Ehsan

# பாவியடா நான்

நான்
சிரிக்கும்போது அழும் பாவியடா
என்ன செய்ய மனிதா! நான்
மேடையேறி
மனம் திறக்க நினைக்கையிலே
பாடைகட்ட நினைக்குதடா என் சமூகம்
பாவியெனத் தெரிந்திருந்தால்
பாவம் நான்
பிறக்கும் போதே இறந்திருப்பேன்
தேவையில்லை இந்த உலகுக்கு நான்
மண்ணிலும் எனைப் புதைக்க
வேண்டாம்
மண்ணுக்கும் நான் பாரமில்லை –
என்னை
கொள்ளை கொண்ட நல்மனிதா
என்னை நீயும்
தொல்லை என்று கழித்துவிடு
பாவம் இந்த பாவியடா
பயமாயிருக்குதிந்த ஞாலமடா!
கருவை வளர்த்த தாயுமவள்
கஷ்டம் நான் என்றேங்குகிறாள்
காலம் எனக்கு நல்லமில்லை
காரணம்
வாழ்க்கை எல்லாம் கஷ்டம் தானே!

வி.வினோதர்சன்,
முருகன் ஸ்டோர்,
கிரான்குளம்-8,

# இலக்கணக் கவிஞன்

ஒரு கவிஞன் தன் மொழிவளம் பெருக்கிக்கொள்வது அவனது கவிதைகளின் விலாசத்தை விசாலப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் தமிழ் இலக்கண நூல்களில் ஒன்றான பவநந்தி முனிவர் இயற்றிய "நன்னூல்" விளக்கவுரையுடன் இவ் இலக்கணக் கவிஞன் பகுதியினூடாக வாசகர்களுக்காக தரப்படுகின்றது.

4. **உயிர்மெய் யிரட்டு நூற் றெட்டுய ராய்தம்**
**எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை**
**ஆறே ழஃகு மிம்முப் பானேழ்**
**உகர மாற றைகான் மூன்றே**
**ஔகா னொன்றே மஃகான் மூன்றே**
**ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி**
**ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப.**

உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு,முற்றாய்தம் எட்டு,உயிரளபெடை இருபத்தொன்றுஒற்றளபெடை நாற்பத்திரண்டு, குற்றியலிகரம் முப்பத்தேழு, குற்றியலுகரம் முப்பத்தாறு, ஐகாரக்குறுக்கம் மூன்று, ஔகாரக்குறுக்கம் இரண்டு, ஆக சார்பெழுத்துக்களை விரித்தால் அவை மொத்தம் முந்நூற்று அறுபத்தொன்பது ஆகும்.

5. **இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின.**

இடுகுறிப் பெயரும் காரணப் பெயருமாகிய இரண்டும் பலபொருளுக்கு பொதுப்பெயராயும், ஒவ்வொரு பொருளுக்குச் சிறப்புப் பெயராயும் வரும்.
இடுகுறிப்பெயர் என்பது ஒரு காரணமும் இல்லாது தொன்றுதொட்டு வழங்கி வருவதாகும். இது பொதுப்பெயர், சிறப்புப் பெயர் என இரு வகைப்படும்.

**(உ+ம்)** இடுகுறிப் பொதுப்பெயர் : மரம், மண், காற்று
இடுகுறிக் காரணப்பெயர் : மா, பலா, கிளி

காரணப்பெயராவது ஏதாவதொரு காரணம் கருதி வழங்கப்படும் பெயராகும். இதுவும் பொதுப்பெயர், சிறப்புப்பெயர் என இருவகைப்படும்.

**(உ+ம்)** காரணப் பொதுப்பெயர் : பறவை, அணி
காரணச் சிறப்புப் பெயர் : மண்வெட்டி, குப்பைவாரி

# கவிதைத் துளிகள்

## தாயின் நினைவலை

பார்த்த சில முகங்கள்
பாதை தேடிப் பிரிந்தாலும்
பாசமுள்ள ~ என்
தாயின் முகம்
இதயமுள்ளவரை உயிர்வாழும்
பூத்திருக்கும் புதுமலர்கூட
பாத்திருக்க வாடிவிடும்
ஆனால்
என்தாயின் நினைவலைகள்
என்றுமே வாடாதது.

## கறை

பால்போன்ற என் மனதில்
தூசு போன்ற உன் நினைவு
இறுகிய என் முகத்தில்
இளகிய உன் சிரிப்பு
நெட்டையான என்னுடலில்
குட்டையான உன் கண்கள்
கறை

## சீதனம்

கரம் பிடித்த மனைவிக்கு
காலம் முழுவதும்
சோறு போட
கணவன் கேட்கும்
முற்பணம்

விஜியாநந்
சவுக்கடி
தன்னாமுனை

## கைக்குட்டை

என்னை விட்டு நீ
விலகிய வேளை ~ என்
கண்களுக்கு ஆறுதல்தந்த
ஒரு ஜீவன்
கைக்குட்டை

## முயற்சி

தூசி விழுந்தாலும்
துடிப்புடன் யாசிக்கிறேன்
ஏன் தெரியுமா?
என் மனதிலென்றும்
முயற்சி அழிந்துவிடாதிருக்க.

## முத்தம்

நான் உன்னை
கனவில் கண்டவுடன்
நீ தந்த முதல்ப் பரிசு
முத்தம்

## தாலி

குனிந்து நிமிரும் போது
இரு மார்பிற்கிடையில் சிக்கி
இதமாக நொருங்கும்
என் இதயம்
தாலி

# நீ யும் நா னு ம்

நான் ஓலை ஒன்று உனக்கெழுதி
ஓயவில்லை என்பேனா?
நீ ஓரமென நின்றுவிட்டால்
காணவில்லை என்பேனா?
நீ பேசவில்லை என்றுவிட்டால்
உன் வேசமிது என்பேனா?
நீ புரிந்து கொள்ளும் பக்குவம்
உண்டுனக்கு என்றுவிட்டால்
அதை நான் புரியவில்லை என்பேனா?
உறவுக்குள் உயிர்கலத்தல்
உகந்ததல்ல என்றுவிட்டால்
உயிரினங்கள் இவ்வுலகில்
இல்லை என்பேனா?
உறவுக்குள் பகைவரலாம்
என்று நீ ஒதுங்கிவிட்டால்
நான் உன் உறவினமே
தேவையில்லை என்பேனா?
கள்ளி மலரென்று உன்னை நீ சொல்லிவிட்டால்
நான் தள்ளி உனைவைத்து
எள்ளி நகையாடுவேனா?
நீ தையல் என்றுனைச் சொல்லிவிட்டால்
நான் மையல் கொள்ளவில்லை என்பேனா?
நீ வெண்ணிலாவிலும்
அழகென்று சொல்லிவிட்டால்
உலகில் நிலாவலமே வரவில்லை என்பேனா?
நீ காதல் தனை தள்ளிவைத்தால்
நான் சாதல் தனை ஏற்பேனா?
இதை நீ கோளைத்தனம் என்றுவிட்டால்
அதை என் வேளையிது என்பேனா?
நீ போதும் இனி என்றுவிட்டால்
போவது நான் என்றிசை என்பேனா?
நீ பேதைநான் என்செய்வேன் என்றுவிட்டால்
நான் போதைதனை அணைக்கவேண்டும் என்பேனா?
நீ போடா என்றென்னைச் சொல்லிவிட்டால்
நான் தாடிதன்னை வைப்பேனா?

*செல்லப்பா சுரேன்*
*இல 10,*
*அன்னமலை,*
*கல்முனை.*

# கிராமியக் கவிஞன்

## தாலாட்டுப் பாடல்

வாய்மொழிப் பாடலாகவோ நாடோடிப் பாமரர் படலாகவோ திகழும் பல பாடல்களில் "தாலாட்டு" பாடலும் ஒன்று. "தால்" என்றால் நா, நாவினால் ஆட்டி உறங்கச் செய்கின்ற பாடல்கள் தாலாட்டு ஆகும்.

ஆராரோ ஆரிவரோ... என ஆராட்டி ஓராரோ ஓரிவரோ... என ஓராட்டி இதன் சந்தம் தோற்றுவிக்கப்படுகின்றது. பொதுவாக நீலாம்பரி இராகத்தில் பாடப்பட்டாலும் யதுகுலதாம்போதி, சகானா, ஆனந்த பைரவி போன்ற இராகங்களிலும் பாடப்படுகின்றது.

குழந்தையின் குலப் பெருமை, அருமை, விளையாட்டுப்பொருள், மாமா, மாமி, போன்றோரின் இயல்புகள் கூறப்படும். அதில் உவமை உருவக அணிகளும் பயன்படுவதோடு பெற்றோரின் எதிர்பார்ப்புக்களும் இலகு நடையில்க் குழந்தைகளின் மனதில்ப் பதியும் வண்ணம் இப்பாடல்கள் அமைந்துள்ளது.

மேலும் இறைவனை நினைத்து இறைவனுக்காகவும், கணவன் மனைவி, பெரியோருக்கான தாலாட்டுப் பாடல்களும் அமையப்பெற்றுள்ளன.

*ஆராரோ ஆரிவரோ*
*ஆராரோ ஆரிவரோ*
*ஆராரோ ஆரிவரோ*
*ஆராரோ ஆரிவரோ*

*அன்பில் விளைந்த முத்தே என்*
*ஆசைக் கினியமுதே*
*இன்பச் சுவைத்தேனே என்*
*இரத்தினமே கண்வளராய்*

*(ஆராரோ ஆரிவரோ......)*

*இல்லம் சிறக்க வந்த என்*
*இனிய குலக் கொழுந்தே*
*ஈன்ற தன் அன்னையின்*
*ஈச்சரமே கண்வளராய்*

*(ஆராரோ ஆரிவரோ......)*

*உலகை ஆழ வந்தாய் - என்*
*உத்தமி தன் வயிற்றில்*
*ஊராரும் போற்ற வந்தாய் - என்*
*உயிரே கண்வளராய்*

*(ஆராரோ ஆரிவரோ........)*

திரு.செ.தேவதாஸ்
புதுக்குடியிருப்பு.

# அட்டைப்படக் கவிதை

படைத்தவற்றுள் இவையும் நன்று
மாறிவரும் மனிதம் இன்று
மாறினால் மனிதம் மாறும் என்று
காட்டுது இது கூர்ப்பை மாற்றிச் சென்று
நவீன மனிதன் மட்டும் நல்லவன் என்று
காட்டுகிறான் பணிவாய்க் குந்தி நின்று.

**வி.வினோதர்சன்**
**கிரான்குளம்**

பயணம் ஆடையின்றி முன்னேறும்
தொடரான பாதை
நிகழ்கால மனிதன் குந்தியிருக்கும்
அறிவில்லா சோதை
எதிர்கால மனிதன் ஆடையின்றி
அலையும் குரங்கின மாதை

**T.யோகாந்தன்**
**ஆலையடி வீதி**
**தம்பிலுவில் -2**

எங்கிருந்து வந்தான் மனிதன்
ஏங்கித் தவித்த வேளையிலே...
அட்டைப்படம் சொல்லியது
அழகான உண்மைகளை.

**கதிரவன்**

---

வெளிவந்து விட்டது

**கதிரவன்**

கல்வி இலக்கிய கலைச் சஞ்சிகை ~4

விலை ரூ.50.00

தொடர்புக்கு: த.இன்பராசா,புளியடி வீதி, புதுக்குடியிருப்பு,
மட்டக்களப்பு.



---



அடுத்த மாதம் அட்டைப்படமாகவுள்ள இப் படத்தைப் பிரதிபலிக்கும் உங்கள் எண்ணங்களை கவிதையாக்கி எமக்கு எழுதியனுப்புங்கள்

# அந்திச்சபதங்கள்

என் உள்மன வேர்களில் விழட்டும்
உன் கோடரி....
ஆழி என்னுள் புகுந்து
மொத்தமாய் சுருட்டிச்செல்லட்டும்
நீ பற்றிய நினைவுகளை...
பற்றிப்படரும் காட்டுத்தீ
என்னிலும் நுழைந்தெரிந்து
கருக்கிச்செல்லட்டும்
என் ஞாபகச்சருகுகளை...
வறண்ட நிலத்தில்
விழுந்த நீர்த்திவலையாய்
காணாமல்போகட்டும்
கசந்துபோன எண்ணக்குப்பைகள்..
விழித்தெழும் வேளை
சூரியன் புதிதாய் முளைக்கட்டும்...
உன்னை ஞாபகம்செய்யும் நிலவு
இவ் இருளுக்குள் தொலைந்துபோகட்டும்...
நாளை வேறு புதிதாய்
கறைகழுவிய நிலவு பிறக்கட்டும்...
இவ்விரவு தூக்கத்தோடு நான் இறந்துபோய்
புதிய பொழுதின் புலர்வின்போது
உனை முதல்கண்ட நொடிக்கு
முன்னைய கணம்வரையிருந்த
நானாய் மறுபிறப்பெடுப்பேன்...
இப்படியான?.
ஒவ்வொரு இரவுச்சபதமும்
தோற்றுப்போகிறதடி ~ என்
காலையின் புலர்வில்...

கலைநாதன் ஜெபகணேஷ்
இல – 10
கோவிந்தன் வீதி.
திருக்கடலூர்.
திருகோணமலை.



# தோழியாய் மட்டும்...

தோழியாய் நீ வேண்டும்.

தோள் சாயும் போதும்
தொடாமல் உன் காதல்
தொலைதூரம் போக வேண்டும்

வெற்றிக்குப் பின்னே
வெள்ளையாய் நீ வேண்டும்
விவசாயி நானென்றால்
விளைநிலமாய் ஆக வேண்டும்

உலகை நான் வெல்ல
உரமாக நீ வேண்டும்
ஊழல் ஏதுமில்லா
ஊடலும் நீ கொள்ள வேண்டும்

தூய அன்பு வேண்டும்
தொலையாத நட்பு வேண்டும்
என்றென்றும் உனைப்பிரியா
ஒய்யார உறவு வேண்டும்.

– கவிஞன் –

# மேசைக் கிறுக்கள்



இப்பகுதி ஒரு வித்தியாசமானதாக அமையலாம். இதற்காக நாங்கள் கவிஞர்கள் உருவாக்கப்படும் ஆரம்ப இடமாகிய வகுப்பறை மேசைகளை நாடவேண்டியிருந்தது. அங்கு பெற்றுக்கொண்ட சில கிறுக்கல்களே இவை. சில மிகவும் உணர்புவூர்வமானவை. முகம்தெரியா கவிஞர்களின் சில முத்துச் செதுக்கல்கள் சில..........

**உன்னைக் கண்டவுடன் செத்துவிட்டேன்**
**காரணம் என் இதயம் என்னிடமில்லை**
**நீ பார்த்ததில் பத்திவிட்டேன்**
**நான் மொத்தத்தில் கத்திவிட்டேன்**
**உன்னால் காதல் முத்தி பெற்றேன்**
**சற்றென்று ரீட்டாய் வருவாயா?**
**எனக்கு காதல் சொட்டாய் தருவாயா?**
**என்னுடன் நீ இணைவாயா?**

*போதை என்னும் மாத்திரை-சில*
*வருடங்களில் கல்லறைக்கு யாத்திரை*
*அங்கே கொள்வாய் -நீ*
*விழிவற்ற நித்திரை*

மழை நேரத்தில் - காகிதத்தில் கப்பல்
செய்து விளையாடும் சிறுவன் போல்
உன் நினைவு வரும் நேரங்களில்
கவி செய்து விளையாடுகிறேன்.

# நிறைமகள்

-வேதமூர்த்தி-



## பூம்புகார்

விண்ணில் கற்பகம்
விளைந்திட
மண்ணில் மலர்ந்திட்ட
பொன்னின் விளைநிலம்
பூம்புகார் - நல்
பூதலத்திருத்தலம் பூம்புகார்.

மண்ணின் வளமுடை
வாழ்மக்கள் நலமுடை
பலமுடை,பல்லினக் கடையுடை
வணிகர்கள் குடியுடை
சோழன்றன் வெண்கொற்றக் குடையுடை
திருநகர்
பெண்ணின் சிறப்புக்கு
என்றும் பேரெடுத்தது
பூம்புகார்.

என்ன பெருமைகள் இல்லை
இதை இயம்பிட
என்மன தெல்லை தொல்லை
கண்ணின் மணியவள்
கண்ணகி வரக்
காத்திருந்தது கனகால்
இங்கே

(தொடரும்...)



# வாசகனிடமிருந்து கவிஞனுக்கு

உங்கள் விமர்சனங்கள், கருத்துக்கள் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன. ஒரு கலைஞனுக்கு விமர்சனங்கள் மிக முக்கியமான தூண்டுகோலாக அமைவதுடன் அவனைப் புடமிடுவதும் உங்களிடமிருந்து வரும் விமர்சனங்களே. இன்றைய இதழில் இப்பகுதியிலும் ஒரு கவிஞனின் கிறுக்கல் இடம்பெறுகின்றது.

~நன்றி~

முதலாவது கவிஞன் என்கரம் கிடைத்திருந்தது. முதலில் கவிஞனுக்கு எனது வாழ்த்துக்கள். கலைநாதன் ஜெயகணேஸ் எழுதியிருந்த இரவுகள் ஒத்திவைக்கப்படுகிறது என்ற கவிதை வாசித்தேன். இரவை அவர் இரசித்தது மட்டுமில்லாமல் எம்மையும் இரசிக்க வைத்துள்ளார். உண்மையாகவே எத்தனை இரவுகள் அது போல் என்னால் இரசிக்கப்படாமலேயே தொலைக்கப்பட்டிருப்பதை உணர்கிறேன்.


✉ *M.M.M.அசாட்*
*இல :49,*
*பிரதானவீதி,*
*சம்மாந்துறை–2*

**தண்டவாளத்தில் ரயில்ஓடும் சத்தம்– அங்கே**
**கடலில் அலைகள் வந்து அமைதிதேடும் ஓசை**
**வெண்பனி நிலத்தில் மொட்டும் வேளை**
**காகம் கரைந்திட்ட அந்த காலைப்பொழுது**
**பறவையின் உற்சாக பரவச ஒலி எங்கும்**
**மலர்கள் பேசும் கவிதையின் வாசம்**
**கவிஞனின் வருகையை எதிர்பார்த்துதான்**

✉ ந.நிதர்சினி,
ஆமன் கோனர்,
மட்டக்களப்பு.

**கவிதை உலகில் ஒரு புதுவரவு**

நூல் : விற்பனைக்கு ஒரு கற்பனை
ஆசிரியர் : ஆரையூர் தாமரை
(செல்வி.தாமரைச்செல்வி செல்லத்தம்பி)
முகவரி : தசபதி,ஆரையம்பதி -1
தொ.பேசி : 065 2245549
வெளியீடு : புரவலர் புத்தகப் பூங்கா
பக்கங்கள் : X+70 = 80
விலை : ரூபா 150.00



# சிவா மல்டி கொம்லக்ஸ்

**பிரதான வீதி,புதுக்குடியிருப்பு. (பாடசாலைக்கு அருகாமையில்)**

பாடசாலை உபகரணங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான புதிய வெளியீடுகள் . போட்டோப் பிரதி லெமினேற்றிங் கொம்பியூட்டர் ப்பிரின்டிங் ஸ்கேனிங் **Internet & E-Mail** சேவை விளையாட்டுப் பொருட்கள்.பரிசுப்பொருட்கள். வாழ்த்தட்டைகள். புக் வைண்டிங் **VCD, DVD Writing**


மற்றும் **Mobitel ,Dialog Reload**

**Dialog, Mobitel, Suntel, SLT net, SLT Passport** போன்ற அனைத்து முற்கொடுப்பனவு அட்டைகளும் இங்கே பெற்றுக்கொள்ள முடியும்



தொடர்புகளுக்கு : *0770452861 . 0653641247*

***E- Mail : psnraj@yahoo.com***






**மாதாந்தம் நீங்களும் கவிஞன் சஞ்சிகையினைப் பெற மற்றும்**

**மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்**

**077 36 20 328**

## அனைத்துத் தொடர்புகளுக்கும்:

*ஆசிரியர்,*
*'கவிஞன்' சஞ்சிகை,*
*கூட்டுறவுக் கடை வீதி,*
*புதுக்குடியிருப்பு - 5 (E.P),*
*மட்டக்களப்பு,*
*இலங்கை.*

**அனைத்து ஆக்கங்களுக்கும் படைப்பாளிகளே பொறுப்புடையவர்**